புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | அக்டோபர் 12, 2017 | புரட்சி 16 | முழக்கம் 39 | விலை: ரூ.3.00

# இளைஞர்களே, ‘சுயஜாதி’ மறுப்பாளர்களாகி ஜாதி சங்கங்களை புறக்கணிப்போம்

# பெண் போராளிகள் அறைகூவல்





“இளைஞர்களே; ஜாதி சங்கங்களைப் புறக்கணியுங்கள்; சுய ஜாதி எதிர்ப்பாளர்களாக மாறுங்கள்; ஜாதி ஒழிப்புக் களம் நோக்கி வாருங்கள்; நமது தலைமுறையிலேயே ஜாதி அமைப்பை முடித்து வைப்போம்!” என்று பெண் போராளிகள் அறைகூவல் விடுத்தார்கள்.

சென்னையில் திராவிடர் விடுதலைக் கழகம், ஜாதி ஒழிப்புக் களம் நோக்கி பெண் போராளிகள் அறைகூவல் விடுக்கும் பொது மேடை ஒன்றை உருவாக்கித் தந்தது. பெரம்பூர் பெரவள்ளூர் சதுக்கத்தில் அக்டோபர் 7 ஆம் தேதி நடந்த எழுச்சி நிகழ்வில் பல்வேறு இயக்கங்களைச் சார்ந்த தோழர்கள், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளைச் சார்ந்த கழகத் தோழர்கள் பெருமளவில் பங்கேற்றனர். நெடிய வீதி முழுதும் மக்கள் தலைகளாகவே காட்சி அளித்தது. 6 மணியளவில் மக்கள் மன்றத்தின் பறை இசை; புரட்சிகரப் பாடல்களுடன் நிகழ்ச்சிகள் தொடங்கின. நேரம் செல்ல செல்ல கூட்டம் அதிகரித்தது. கூடுதல் இருக்கைகள் போடப்பட்டுக் கொண்டே இருந்தன. இருக்கைகளுக்குப் பின்னாலும் வீதியின் ஓரங்களிலும் அடர்த்தியாக இளைஞர்களும் பொது மக்களும் திரண்டு இளம் பெண் போராளிகளின் ஜாதி ஒழிப்புப் போர் முரசைக் கேட்டு உணர்ச்சி மயமானார்கள்.

வடசென்னை மாவட்ட கழகத்தின் பெண் செயல்பாட்டாளரும், நிகழ்வை முன்னின்று நடத்தியோரில் ஒருவருமான சா. ராஜி நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார். மற்றொருசெயல் போராளி வ. சங்கீதா வரவேற்புரையாற்றினார். மக்கள் மன்ற கலை நிகழ்வுகளுக்கிடையே ஆசிரியர் வீ. சிவகாமி (தமிழ்நாடு அறிவியல் மன்றம்), மகேசு (மக்கள் மன்றம்), உடுமலை கவுசல்யா, ‘கக்கூஸ்’ ஆவணப்பட இயக்குனர் திவ்யபாரதி, எழுத்தாளர் ஜெயராணி, சுற்றுச் சூழல் உரிமைகளை விளக்கி துண்டறிக்கை வழங்கியதற்காக குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்ட வளர்மதி ஆகியோர் எழுச்சி உரையாற்றினர்.

இளம் பெண் போராளிகள் அனைவரும் மேடையில் ஜாதி ஒழிப்பு உறுதி மொழி ஏற்றனர். கூட்டத்தினர் அனைவரும் எழுந்து நின்று உறுதி ஏற்றனர். சிறப்பு விருந்தினர்களுக்கு கேடயம் மற்றும் நீடாமங்கலம் ஜாதிக் கொடுமையை விளக்கும் வரலாற்று ஆய்வு நூலை கழகத் தலைவர், பொதுச் செயலாளர் வழங்கினர். களப்பணிகளில் பங்கேற்க முன் கூட்டியே வந்திருந்த திருப்பூர் கழகப் பெண் தோழர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. இறுதியாக இந்த நிகழ்வின் நோக்கத்தை விளக்கி சுருக்கமாக பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பேசினார். ர. சங்கவி நன்றி கூறினார்.

மாநாட்டு மேடையில் அனிதா நீதி கேட்பது போன்ற படமும்; பெரியார், அம்பேத்கர் மற்றும் அண்மையில் மதவெறியர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட கவுரி லங்கேஷ் படமும் வைக்கப்பட்டிருந்தன. ‘கருப்பு-சிவப்பு-நீலம்’ என்ற மூன்று தத்துவங்களில் பணியாற்றும் பெண் போராளிகளை ஒரே மேடையில் பேச வைத்து ஜாதி எதிர்ப்புக்கு புதிய களத்தை உருவாக்கித் தந்திருக்கிறது திராவிடர் விடுதலைக் கழகம் என்று பலரும் பாராட்டினார்கள்.

வடசென்னை மாவட்டத் தலைவர் ஏசுகுமார், செயலாளர் செந்தில்-எப்.டி.எல்., ராஜி, சங்கீதா உள்ளிட்ட தோழர்கள் நிகழ்ச்சிக்கு கடுமையாக உழைத்து சிறப்பாக்கினர்.

– நமது செய்தியாளர்

## நமது தலைமுறையில் முடித்து வைப்போம்!



பெரம்பூர் கூட்ட மேடையில் பெண் போராளிகள் கீழ்க்கண்ட உறுதி மொழியை எடுத்தனர். கூட்டத்தினரும் எழுந்து நின்று உறுதி எடுத்தனர்.

“மனிதர்கள் – மனிதர்களாகவே பிறக்கிறார்கள்.

ஜாதி – அடையாளம் பின்னர் திணிக்கப்படுகிறது.

ஆணுக்குப் பெண் அடிமை என்பதும், சூழ்ச்சியால் கட்டமைக்கப்பட்டது.

பெண்களாகிய நாங்கள், இளைய தலைமைக்கு விடுக்கும் அறைகூவல் இதுதான்.

ஜாதி – பெண்ணடிமை ஒழிப்பை நமது தலைமுறையில் முடித்து வைப்போம்.

இளைஞர்களே! ஜாதி சங்கங்களைப் புறக்கணியுங்கள்!

சுய ஜாதி மறுப்பாளர்களாக சுய பாலின உணர்வை விட்டவர்களாக மாறுங்கள்!

ஜாதி ஒழிப்பு களம் நோக்கி வாருங்கள்!

வெற்றி நமதே!”

**தலையங்கம்**

## கேரள அரசின் ஜாதி ஒழிப்புப் புரட்சி

*‘திருவிதாங்கூர் தேவஸ்வம்போர்டு’ 36 பார்ப்பனரல்லாதாரை அர்ச்சகர்களாக்கி சாதனைப் படைத்திருக்கிறது. இதில் 6 அர்ச்சகர்கள் ‘தலித்’துகள் என்பது கூடுதல் சிறப்பு. ஆகம விதிமுறைகளைப் பின்பற்றும் பெரும் கோயில்களில் ‘பிராமணர்கள்’ மட்டுமே அர்ச்சகராக முடியும்; வேறு ‘பிரிவினர்’ அர்ச்சகராவது ஆகமங்களுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் எதிரானது என்று தமிழ்நாட்டு பார்ப்பனர்கள் ஜாதித் திமிரோடு கூறி வருகிறார்கள். தி.மு.க. ஆட்சி 1970ஆம் ஆண்டே தந்தை பெரியார் கோரிக்கையை ஏற்று சட்டமன்றத்தில் ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றியது. பார்ப்பனர்கள் நேரடியாக உச்சநீதிமன்றம் சென்று சட்டத்தை முடக்கினார்கள். தொடர்ந்து எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்தபோது இது குறித்து ஆராய நீதிபதி மகாராஜன் தலைமையில் 1979ஆம் ஆண்டு ஒரு குழு அமைக்கப்பட்டது. அக்குழுவின் பரிந்துரை 1982இல் வெளியிடப்பட்டது. ஆகமக் கோயில்களில் அனைத்து ஜாதியினர் அர்ச்சகராக எந்தத் தடையும் இல்லை என்று சாஸ்திர ஆதாரங்களை விரிவாக எடுத்துக் காட்டி, அந்தக் குழுப் பரிந்துரை வழங்கியது. 2003ஆம் ஆண்டு பெரியார் திராவிடர் கழகம், இப்பிரச்சினைக்கு மீண்டும் உயிர் கொடுக்க காஞ்சி காமாட்சி அம்மன் கோயிலில் கர்ப்பகிரக நுழைவுப் போராட்டம் நடத்தி 1000 தோழர்கள் கைதானார்கள். பிறகு 2006ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியிலிருந்தபோது, “உரிய கல்விப் பயிற்சி பெற்ற எந்த ‘இந்து’வையும் இந்து கோயில்களில் அர்ச்சகராககலாம்” என்ற அரசாணையை பிறப்பித்தது (23.05.2006). அதைத் தொடர்ந்து அவசரச் சட்டம் ஆளுநர் ஒப்புதலோடு வெளியிடப்பட்டது (14.07.2006). பழக்க வழக்கங்கள் என்ற அடிப்படையில் இந்த நியமனங்களை தடைப்படுத்த முடியாது. இதற்கேற்றவாறு இந்து அற நிலையத் துறையின் 55ஆவது பிரிவு ஏற்கெனவே திருத்தப்பட்டிருக்கிறது” என்று அந்த அவசர சட்டம் கூறியது. ஆளுநரின் அவசர சட்டத்துக்கு தமிழக அரசு சட்டமியற்றி ஒப்புதல் வழங்கியது (29.8.2006).*

*இப்படி ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டதற்கான பின்னணியில் 2002ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத்திற்கு வந்த ஒரு முக்கிய வழக்கின் தீர்ப்பு இருந்தது. அது கேரளாவில் ஆதித்யன் என்ற நம்பூதிரி பார்ப்பனர் தொடர்ந்த வழக்கு. நம்பூதிரிப் பார்ப்பனர் மட்டுமே வழமையாக அர்ச்சகராக இருந்த ஒரு கேரள கோயிலில் ஈழவ சமுதாயத்தைச் சார்ந்தவர் அர்ச்சகராக நியமிக்கப்பட்டதை எதிர்த்து தொடர்ந்த வழக்கு, உச்சநீதிமன்றத்தில் இரு நீதிபதிகள் அடங்கிய அமர்வு (எ. ராஜேந்திர பாபு-துரைசாமி ராஜூ) இந்த வழக்கில் மிகச் சிறப்பான ஒரு தீர்ப்பை அளித்தனர்.*

*“இந்திய அரசியல் சட்டம் வருவதற்கு முன்னால் ஒரு குறிப்பிட்ட ஜாதியினரே அர்ச்சகராக வர முடியும் என்ற ஒரு பழக்கம் இருந்திருக்கிறது என்பதற்கு ஆதாரம் இருந்தாலும், இந்திய அரசியல் சட்டம் அமுலுக்கு வந்த பிறகு பழைய பழக்க வழக்கம்* (Custom and Usage) *என்று காட்டி அரசியல் சட்டத்துக்கு எதிரான உரிமையை கோர முடியாது. அரசியல் சட்டத்தால் மனித உரிமைகள் கவுரம் சமூக சமத்துவம் உறுதிப்படுத்தப்பட்ட பிறகு, இதற்கு நேர் எதிரான வேறு உரிமைகள் ஏதும் இருக்க முடியாது. அர்ச்சகர்களாக நியமிக்கப்படுவோர் குறிப்பிட்ட ஜாதியைச் சார்ந்தவராக இருக்க வேண்டும். அந்த ஜாதியின் பெற்றோர்களுக்கு பிறந்திருக்க வேண்டும் என்று வற்புறுத்துவது அத்யாவசியமானது அல்ல. அப்படி செய்வதற்கு அடிப்படையும் இல்லை” என்று உச்சநீதிமன்றம் கூறி ஆதித்யன் மனுவை தள்ளுபடி செய்தது. இந்தத் தீர்ப்பின் அடிப்படையில்தான் தமிழ்நாட்டில் இந்து அறநிலையத் துறையின் சட்டத்தில் ‘பழக்க வழக்கம்’ என்ற பிரிவு நீக்கப்பட்டது.*

*இதே அடிப்படையில் கேரளாவில் பார்ப்பனரல்லாத அர்ச்சகர்கள் இப்போது நியமிக்கப்பட்டனர். இந்தப் பின்னணியில் ‘கேரள தேவஸ்வம் போர்டு’ கட்டுப்பாட்டில் உள்ள 1248 கோயில்களில் அனைத்து ஜாதியினரையும் தகுதி அடிப்படையில் நியமிக்கலாம் என்று மாநில அறநிலையத் துறை அமைச்சர் கடகம்பள்ளி சுரேந்திரன் இப்போது உத்தரவிட்டுள்ளார். அதனடிப்படையில் தேவஸ்வம்போர்டு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பம் பெற்று அவர்களுக்கு எழுத்து தேர்வு நேர்முகத் தேர்வுகளை நடத்தி 6 தலித் உள்ளிட்ட 36 பார்ப்பனரல்லாதாரை அர்ச்சகராக நியமித்துள்ளது. ஆணையாளர் இராமராஜ பிரசாத் இதற்கான ஆணையை பிறப்பித்துள்ளார். கேரள அரசின் இந்த ஜாதி ஒழிப்புப் புரட்சியை பாராட்டி வரவேற்கிறோம்.*

*தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சி பிறப்பித்த உத்தரவை எதிர்த்து ஆதி சைவ சிவாச்சாரிகள் மற்றும் தென்னிந்திய திருக்கோயில் நிர்வாக சபை சார்பில் பார்ப்பனர்கள் உச்சநீதிமன்றத்தில் மீண்டும் வழக்கு தொடர்ந்தனர். மனுவை தள்ளுபடி செய்தாலும் தீர்ப்பில் ஒரு குறிப்பிட்ட வகுப்பினரே அர்ச்சகராக முடியும் என்று ஆகமங்கள் கூறுவதை நியாயப்படுத்திய உச்சநீதிமன்றம் இதைத் ‘தீண்டாமை’ யாகக் கருத முடியாது என்று கூறி* (Agamas was not violation of the right to equality) *மீண்டும் பார்ப்பனர் மட்டுமே அர்ச்சகர் ஆக முடியும் என்ற ‘கர்ப்பக்கிரக தீண்டாமையை’ உறுதிப்படுத்தியிருக்கிறது.*

*“கேரளத்திலுள்ள இந்துக் கோயில்களும், கடவுள்களும் அனைத்து ஜாதியினரையும் அர்ச்சகராக அரவணைக்கும்; தமிழ்நாட்டில் உள்ள ‘இந்து கோயில்களும், இந்து கடவுள்களும்’ தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட பார்ப்பனரல்லாத எவரையும் ‘அர்ச்சகராக’ ஏற்றுக் கொள்ளாது!” என்ன விசித்திரம்! இதுதான் ஒற்றை ‘இந்து’ கலாச்சாரமா?*

*தமிழ்நாட்டைச் சார்ந்த பார்ப்பன எழுத்தாளர்கள் இப்போதும் ‘தி ஒயர்’ போன்ற இணையதளங்களில் பெரியாரின் பார்ப்பன எதிர்ப்பை ‘பாசிசம்’, ‘இனவாதம்’ என்று எழுதிக் கொண்டிருக் கிறார்கள். அனைவருக்கும் பொதுவானவர் என்று கூறப்படும் கடவுளை நெருங்கவும் அர்ச்சனை செய்யவும் ஒரு இனத்துக்கு மட்டுமே உரிமை என்று கூறும் தமிழ்நாட்டுப் பார்ப்பனர்கள் இனவாதியா? அனைத்து ஜாதியினருக்கும் (பார்ப்பனர் உட்பட) உரிமை வேண்டும் என்று கேட்ட பெரியார் இனவாதியா? என்று கேட்க விரும்புகிறோம்.*

*கேரளா காட்டும் வழியில் தமிழகத்திலும் அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகும் நிலையை உருவாக்க வேண்டும்!*

## சென்னை பெரம்பூர் கூட்டக் காட்சிகள்







## கழகம் - தோழமை அமைப்புகள் எதிர்ப்பு: மதுரை ஆர்.எஸ்.எஸ். பேரணிக்கு அனுமதி மறுப்பு



மதுரையில் அக். 8ஆம் தேதி ஆர்.எஸ்.எஸ். பேரணிக்கு காவல்துறை அனுமதி அளித்திருந்தது. அமைச்சர் செல்லூர் ராஜூ தொடங்கி வைப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. உடனே மதுரை மாவட்ட கழகச் செயலாளர் மணி கண்டன், மற்றும் தமிழ்ப் புலிகள் கட்சி, ஆதித் தமிழர் பேரவை, த.பெ.தி.க., இளந் தமிழகம், புரட்சிகர இளைஞர் கழகம், சி.பி.எம்.எல். ஆகிய அமைப்புத் தோழர்கள், மாநகர காவல்துறை அதிகாரியை சந்திந்து, ஜெயலலிதா முதல்வராக இருந்த வரை ஆர்.எஸ்.எஸ். பேரணிக்கு அனுமதியளிக்காமல் இருந்ததை சுட்டிக்காட்டி சட்டம் ஒழுங்குப் பிரச்சினை உருவாகும் வாய்ப்பு உள்ளதால் தடை விதிக்கவேண்டும் என்று கோரி இருந்தனர்.

மதுரை மாவட்ட செயலாளர் மணி கண்டன் தனது முகநூலில், “60 தோழர்கள் கைதாகி ரிமாண்ட் ஆவதற்கு தயாராகி விட்டோம். ஆர்.எஸ்.எஸ். ஊர்வலத்தை எதிர்த்து கருப்புக் கொடி காட்டவும் தயாராகி விட்டோம். எங்கள் தோழர்களை கட்டுப்படுத்த முடியாது” - என்று பதிவிட்டிருந்தார். எதிர்ப்புகளைத் தொடர்ந்து ஊர்வல அனுமதியை காவல்துறை மறுத்தது. அமைச்சர் செல்லூர் ராஜூவும் தான் பங்கேற்கப் போவதில்லை என்று அறிவித்தார்.

# பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரை (4)

# பவுத்தத்தை - பார்ப்பனியம் அழித்த வரலாறு

***புத்தர் விழா கொண்டாடி, அதில் விநாயகன் சிலைகளை பெரியார் உடைக்கச் சொன்னார் என்ற வரலாற்றை விடுதலை இராசேந்திரன், கைத்தடி கண்டன ஊர்வலத்தில் கைதான கழகத்தினரிடம் சுட்டிக் காட்டினார்.*** *(சென்ற இதழ் தொடர்ச்சி)*

புத்த மார்க்கம் பார்ப்பனர்களையும் ஏற்றுக் கொண்டதால் அதற்கான கடும் விலையை அது தர வேண்டியிருந்தது. புத்த மார்க்கப் புரட்சியால் யாகம், சடங்குகளின் செல்வாக்குகள் வெகுவாகக் குறைந்துவிட்டதால் வருமானமில்லாத நிலையில் பல பார்ப்பனர்கள், பார்ப்பன உணர்வுகளைவிட்டு விடாமலேயே புத்த மார்க்கத்தில் இணைந்துக் கொண்டனர். புத்த பிட்சுக்களாக உருவாக்கப்பட்ட ‘ஆஸ்ரமங்களில்’ அவர்கள் சுகவாழ்வு வாழத் தொடங்கினர். பிற்காலத்தில் பிரிட்டிஷ் ஆட்சியில் அதிகார மய்யங்களைப் பார்ப்பனர்கள் தங்கள் வசமாக்கிக் கொண்ட அதே கதைதான். புத்த பிட்சுவாக மாறிய பிறகும் பார்ப்பனர்கள் தங்கள் ‘தீண்டாமை’யை விட்டு விடவில்லை என்பதை சீனப் பயணியாக இந்தியாவுக்கு வந்த ஃபாஹியான் தனது பயணக் குறிப்பில் பதிவு செய்திருக்கிறார்.

“புத்த மார்க்கத்தைத் தீவிரமாகப் பிரச்சாரம் செய்து வந்த ஒரு பார்ப்பன புத்த பிக்கு பாடலிபுத்திரத்தில் இருந்தார். மன்னர் அவரைச் சந்திக்கச் செல்லும்போது குருவின் கைகளைத் தொட்டு வணங்குவார். உடனே அந்த ‘பார்ப்பன பிக்கு’ தலைமுதல் பாதம் வரை தண்ணீரில் தேய்த்து குளிப்பது வழக்கம்” என்று குறிப்பிடுகிறார். புத்த மதத்தின் கட்டுப்பாடு பாடலிபுரத்தில் இருந்தவரை ஊடுருவிய பார்ப்பனர்களால் எந்த மாற்றமும் செய்ய முடியவில்லை என்றும் வெளி நாட்டினர் ஏராளமாக வரத் தொடங்கி அவர்கள் புத்த மார்க்கத்தில் சேர்ந்து ஆஸ்ரமங்களைக் கைப்பற்றிய பிறகு பார்ப்பனர்கள் புரோகித மந்திர தந்திரங்களை புத்த மார்க்கத்தின் தவிர்க்க முடியாத அம்சமாக மாற்றிவிட்டனர். பவுத்தப் பேரரசுகளின் அதிகாரம் குன்றி வெளி நாட்டினர் இந்தியாவுக்கு வந்து அரசாட்சியைக் கைப்பற்றிய வுடன் பார்ப்பனர்கள் புத்தமதத்தை இரண்டாகப் பிளந்து புத்தரை கடவுளாக்கி யாக சடங்குகளைப் புகுத்தி விட்டனர் என்று ஹேவல், ஆர்.சி.தத் போன்ற வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

பார்ப்பனர்களின் தலைமையில் உருவானதுதான் ‘மகாயான பவுத்தம்’, அதன் வழியாக புத்தரும் காளி தேவியும் ஒன்றுதான் என்று பிரச்சாரம் செய்யத் தொடங்கி விட்டனர். புத்தமார்க்கம் இரண்டாகப் பிளவுபட்டது வைசாலி என்ற பகுதியில் தான்.

புத்தரின் மரணத்துக்கு 8 ஆண்டுகளுக்கு முன்பு அவரது உண்மையான சீடர்கள் சதவானி என்ற மலைக்குகை வாயிலில் முதல் பவுத்தப் பேரவையை கூட்டினார்கள். புத்தரின் அனைத்து கோட்பாடு களையும் முறையாக மூன்று பிரிவுகளாக தொகுத்து ஒழுங்குபடுத்தி, ‘திரிபீடகம்’ என்று அதற்கு பெயரிட்டார்கள். பீடகம் என்றால் பிரிவு என்று பொருள். இந்த ‘திரிபீடகம்’ எழுத்து வடிவில் தொகுக்கப்படவில்லை என்பது முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியதாகும்.

அதற்குப் பிறகு 100 ஆண்டுகள் கழித்து தான் இரண்டாம் பவுத்தப் பேரவை வைசாலியில் கூடியது. புத்தர் அப்போது உயிருடன் இல்லை. அப்போது புத்த துறவிகளுக்கான விதிமுறைகளை மாற்றுவது என முடிவெடுத்து பத்து மாற்றங்களை ஊடுருவிய பார்ப்பனர்கள் செய்தார்கள். புத்தர் கூறிய சங்கத்துக்கான விதிமுறைகளை கட்டாயம் ஏற்க வேண்டிய அவசியமில்லை என்பதும், தங்கம், வெள்ளி போன்ற விலை மதிப்பு மிக்க பொருள்களை தானமாகப் பெறக் கூடாது என்ற விதியை மாற்றி தானமாகப் பெற்றுக் கொள்ளலாம் என்பதும் மாற்றப்பட்ட திருத்தங்களில் அடங்கும்.

தலைமை தாங்கிய புத்த துறவி ரேவதர், இந்த திருத்தங்கள் புத்தரின் கொள்கைகளுக்கு எதிரானது என்று ஏற்க மறுத்தார். ‘வஜ்ஜியத் துறவிகள்’ என்று அழைக்கப்பட்ட பார்ப்பன துறவிகள் பேரவையி லிருந்து வெளியேறி தனிப் பிரிவாக செயல்படத் தொடங்கினர். வைசாலியில் புத்த மார்க்கம் இரண்டாகப் பிளவுபட்டது. அடுத்த 400 ஆண்டுகளில் பவுத்தம் 108 பிரிவுகளாக சிதறியது என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். இதில் 18 பவுத்தப் பிரிவுகள் பற்றிய குறிப்புகள் மட்டும் இருக்கின்றன. இதில் மகாயான பவுத்தப் பிரிவை கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் ஆந்திராவைச் சார்ந்த நாகார்ஜுனன் என்ற பார்ப்பனர் உருவாக்கினார். மகாயானப் பவுத்தப் பிரிவு தோன்றியதற்குப் பிறகு ஏனைய பவுத்தப் பிரிவினரை அது விழுங்கிக் காணாமல் போகச் செய்துவிட்டது. நாகார்ஜுனன் முன் வைத்த ‘மாயாவாதம்’ என்ற தத்துவம் புத்தரின் பொருளிய நாத்திகத்துக்கு முற்றிலும் எதிரானது என்கிறார் ஆய்வாளர் தேவி சட்டோபாத்யாயா.

“உலகத்தை கடவுள் படைத்தார்; அல்லது கடவுளால் உலகம் படைக்கப்படவில்லை” என்ற முரண்பாட்டு தர்க்கத்தை நாகார்ஜுனன் குழப்பி, நாத்திகம் பேசும் பாவனையோடு தெளிவற்ற நிலைக்கு கொண்டு சென்று விடுவதை சட்டோபாத்யாயா சுட்டிக் காட்டுகிறார். அவரது மொழியிலேயே கூற வேண்டுமானால், “நாகார்ஜுனரைப் பொறுத்தவரை முரண்பாட்டு விதி என்பது கழைக் கூத்தாடியின் வெற்று வித்தையைப் போன்றது. தனது மாயா ஜாலத்தின் மூலம் யாதொன்றையும் கணப்பொழு துக்கு நம் கண்களிலிருந்து மறைத்திடும் கழைக் கூத்தாடியைப்போல, புலனறிவுக்கு உட்படுகிற உண்மைகள் அனைத்தையும் நாகார்ஜுனன் சூன்யத்துக்குள் தள்ளி விடுகிறார். அவரின் இந்த மாயாவாதம் - தத்துவக் கண்ணோட்டத்தில் மிகவும் ஆபத்தானது” என்கிறார். புத்தரின் கருத்துகள் சிதைக்கப்பட்டது மட்டுமல்ல, புத்தமார்க்கமும் சிதைக்கப்பட்டது.

ஒடுக்கப்பட்ட மக்களின் புகலிடமாக புத்தர் காலத்தில் இருந்த புத்த மடங்கள் சொகுசு மடங் களாகி, புத்தரின் கோட்பாடுகள் அனைத்துக்கும் எதிரானதாக மாறிப் போனது என்கிறார் ஆய்வாளர் ரொமிலா தாப்பர். ஆதரவற்ற ஏழைகள் படும் துயரத்துக்கான காரணம் அவர்கள் முற்பிறவியில் செய்த தீமைகள் என்றும் நியாயப்படுத்தத் தொடங்கிவிட்டார்கள். பவுத்தத்தைப் பின்பற்றிய அசோகர் சமூகப் புரட்சியை முன்னெடுப்பதில் ஓரளவுதான் வெற்றி பெற்றார். பார்ப்பனர்களின் கொட்டங்கள் அசோகர் காலத்திலேயே தொடங்கி விட்டன. அவர்களை அசோகர் அடக்கத் தவறி விட்டார். அனைவரையும் அரவணைத்துப் போக வேண்டும் என்ற அவரது அன்பு உள்ளமே கொள்கைத் தோல்வியில் முடிந்தது என்கிறார் ஆய்வாளர் ரைஸ்டேவிட்ஸ். அசோகர் மறைந்த 40 ஆண்டுகளுக்குள் வரலாற்றின் பொற்காலம் என்று அம்பேத்கர் வர்ணிக்கும் மவுரிய ஆட்சியும் முடிவுக்கு வந்தது.

பவுத்த மதம் முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டும். வேதம் மீண்டும் அரியணையில் ஏற்றப்பட வேண்டும் என்று முடிவெடுத்த பார்ப்பனர்கள், அதற்கு கடவுள் மறுப்புக் கொள்கையாளர்களின் சிந்தனைகள் நூல்களை எல்லாம் முற்றாக அழிக்கும் வேலைகளைத் தொடங்கினர். சட்டோத்யாயா வேதனையுடன் இவ்வாறு கூறுகிறார்: “கடவுளை மறுத்த லோகாயதவாதிகளின் உன்னதமான படைப்பிலக்கியங்களை மூலப் படிகளை மீட்கவே முடியாதவாறு அழிக்கப்பட்டுவிட்டன. துண்டு துண்டாக வெட்டப்பட்ட சில பகுதிகள் தான் கிடைக்கின்றன. அவைகள் கூட லோகயாதத்தை எதிர்த்தவர்கள் நூல்களிலிருந்துதான் கண்டறிய முடிகிறது” என்கிறார்.

மவுரிய வம்சத்துக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த புஷ்யமித்திர சுங்கன் என்ற சுங்க வம்சத்தைச் சார்ந்த பார்ப்பனன், அசோகர் நிறுவிய 84000 தூண்களை (புத்தர் பொன்மொழிகளைக் கொண்டவை) இடித்துத் தரைமட்டமாக்கினான். பார்ப்பனர்களும் களத்தில் இறங்கினார்கள். புத்த மடாலயங்களை தரைமட்டமாக்கி புத்த பிக்குகளையும் கொன்று ஒழித்தார்கள். இந்த கொடூரமான வரலாறுகளை வேறு ஒரு சந்தர்ப்பத்தில் விரிவாக பேசுவோம்.

புத்த மதத்தில் ஊடுருவிய பார்ப்பனியம் அதை மெல்ல வலுவிலக்கச் செய்து கொண்டிருந்த சமூகச் சூழலில் கி.பி.8ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கேரள பார்ப்பனர் சங்கரர், பார்ப்பனியத்துக்கு புத்துயிரூட்ட ‘அத்வைதம்’ என்ற தத்துவத்தை முன் வைத்தார். பார்ப்பனியத்தை உறுதிப்படுத்தி ‘நான்கு வர்ண’ சமூகத்தை மேலும் வலிமைப்படுத்துவதே அதன் நோக்கமாக இருந்தது. உலகத்தை ‘மாயை’, ‘உண்மையற்றது’ என்று கூறிய சங்கரரின் அத்வைதம், ‘புத்த மார்க்கத்தை’ மட்டும் ‘மாயை’ என்ற பார்வையில் பார்க்காமல் அதை அழித்து ஒழிப்பதில் சங்கரர் ஈவிரக்கமின்றி செயல்பட்டதை வரலாற்றாளர்கள் குறிப்பிடுகிறார்கள். புத்தரின் கொள்கைகளைப் பரப்ப, ‘புத்த மடாலயங்கள்’ ஏற்படுத்தியதை அப்படியே பின்பற்றிய சங்கரர், வடக்கே பத்ரிநாத், மேற்கே துவாரகை, கிழக்கே பூரி, தெற்கே சிருங்கேரி என்ற மடங்களை நிறுவினார். (காஞ்சிபுரம் சங்கர மடம், உண்மையில் சங்கரர் நிறுவியது அல்ல. சங்கரர் நிறுவியதாக கூறிக் கொண்ட மோசடி மடம்) ‘சூத்திரர்கள் வேதம் படிக்கவோ, யாகம் செய்யவோ உரிமையில்லை’ என்றார் சங்கரர். மக்கள் தொகையில் பெரும் பான்மையாக இருந்த ‘சூத்திரர்கள்’ கல்வி அறிவற்றவர்களாகவே முடங்கவேண்டும் என்ற ‘காருண்யமிக்க’வர்களாகவே சங்கரர்கள் இருந்தார்கள்.

புத்த மார்க்கத்தில் ஊடுருவி, அதன் கொள்கை களை சிதைத்த பார்ப்பனர்கள், கடைசியில் புத்தரை ‘விஷ்ணு’வின் 10 அவதாரங்களில் 9ஆவது அவதாரமாக அறிவித்து விட்டனர். கி.பி. 6ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு எழுதப்பட்ட மச்ச புராண சுலோகம் விவரிக்கும் பத்து அவதாரங்களில் “ராமோ ரமகோ கிருஸ்ணங்கா - **‘புத்தா’** கல்கி இதிகா க்ரம்திஹ்” - என்று எழுதி புத்தரையும் அவதாரமாக்கி விட்டது.

வரலாற்றில் பார்ப்பனக் கொடுங்கோன்மையை எதிர்த்தவர்கள் அழிக்கப்பட்டார்கள்; வீழ்த்தப் பட்டார்கள் இன்று வரை ‘உயிரோடு’ நிலைத்து நிற்பது பெரியார் மட்டும் தான்.

பெரியாரியத்தின் தூதுவர்களாக நாம் களத்தில் நிற்கிறோம்.

**(நிறைவு)**

## அரசு அலுவலகங்களில் ஆயுத பூஜையைக் கண்டித்து பெரம்பலூரில் ஆர்ப்பாட்டம்

25.09.2017 அன்று பெரம்பலூர் பழைய பேருந்து நிலையம் காந்தி சிலை அருகில் அரசு அலுவலகங்களில் ஆயுத பூஜைகள் நடத்துவதை நிறுத்தக் கோரியும் கடவுள் படங்களை அகற்றக் கோரியும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு கழக மாவட்ட தலைவர் துரை. தாமோதரன் தலைமை தாங்கினார். நகர செயலாளர் இராஜேஷ் குமார், சுதாகர் முன்னிலையில் தி.மு.க. பொதுக் குழு உறுப்பினர் ஓவியர் முகுந்தன், தி.மு.க. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் தேவராஜ், சி.பி.அய்.எம். விவசாய அணி செயலாளர் என். செல்லதுரை, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் செயலாளர், மாநில வழக்கறிஞர் பேராசிரியர் முருகையன், வி.சி.க. வழக்கறிஞர் ஸ்டாலின், திராவிடர் கழகத்தைச் சார்ந்த அக்ரி ஆறுமுகம், தி.க. மாவட்ட செயலாளர் தங்கராசு, பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில துணைப் பொதுச்செயலாளர் வழக்கறிஞர் காமராசு, முற்போக்கு வழக்கறிஞர் சங்க தலைவர் வழக்கறிஞர் சீனிவாசன், பெரியார் தொண்டர் சிற்பிராசன், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தைச் சார்ந்த கலைஞர் சங்கர், பேராசிரியர் ப. செல்வகுமார், ஆசிரியர் இராமர், கவிஞர் அகவி மற்றும் பலர் கண்டன உரை ஆற்றினர். 4 மணி நேரம் எழுச்சியுடன் நடந்த ஆர்ப்பாட்டத்தை மக்கள் திரளாக நின்று கேட்டனர். 26.9.2017 அன்று மாவட்ட ஆட்சியரிடமும், காவல் கண்காணிப் பாளரிடமும் அரசு அலுவலகங்களில் ஆயுத பூஜையை நிறுத்தக் கோரி கழக சார்பில் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

## நன்கொடை

10.9.2017 திருப்பூரில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்ற அசுவிதா-நாகராசு ஆகியோரின் வாழ்க்கை ஒப்பந்த விழா மகிழ்வாக ரூ.2000/- நன்கொடை வழங்கப்பட்டது.

கோபி கழகத் தோழர் அருள்-யசோதா இணையரின் மகன் யாழ் திலீபன் எட்டாம் பிறந்த நாள் மகிழ்வாக ரூ.1000/- நன்கொடை வழங்கப்பட்டது.

பெற்றுக் கொண்டோம் (ஆர்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# திவ்யபாரதி ஆவேச உரை

# இரயில் நிலையங்களில் கையால் மலம் எடுக்கிறார்கள்; இதை ஒழிக்க வக்கில்லாமல் புல்லட் இரயில் விடுகிறார் மோடி

*சென்னையில் ஜாதி எதிர்ப்புக்கான பெண் போராளிகளின் அறைகூவல் பொதுக்கூட்டத்தில் 'கக்கூஸ்' ஆவணப் பட இயக்குனர் திவ்யபாரதி உரையில் குறிப்பிட்டதாவது:*



சமுதாயப் பிரச்சினைக்காகப் போராடுகிறவர்கள் மீது 'தேச விரோதிகள்' என்று குற்றம்சாட்டு கிறார்கள். இங்கே இவ்வளவு பெரிய அளவில் திரண்டிருக்கிற நாம் எல்லோரும் 'சங்பரிவார்' பார்வையில் தேச விரோதிகள். சாவர்க்கார் பிரிட்டிஷ் அதிகாரியைக் கொலை செய்த குற்றத்தில் தண்டிக்கப்பட்டு அந்தமான் சிறையில் அடைக்கப்பட் டிருந்தபோது பிரிட்டிஷ் ஆட்சியிடம் மன்னிப்புக் கேட்டு விடுதலையானவர். அவரை 'வீர சாவர்க்கார்' என்று கூறுகிற கூட்டம், நம்மைப் பார்த்து தேச விரோதி என்கிறது.

நான் எடுத்த 'கக்கூஸ்' ஆவணப் படத்துக்காக கடும் எதிர்நீச்சல் போட வேண்டியிருந்தது. 25 இடங்களை மய்யமாக வைத்து அங்கே மனித மலத்தை மனிதர் அள்ளும் இழிவு தொடர்வதைப் படம் பிடித்தோம். நகரங்களிலுமா இப்படி நடக்கிறது என்று கேட்டார்கள். ஜாதி இழிவு கிராமத்தில் தான் இருக்கிறது, நகரங்களில் இல்லை என்பது ஒரு மூட நம்பிக்கை. பார்ப்பனியமும் பெண்ணடிமையும் ஜாதியும் கிராமம், நகரம் என்று பேதமின்றி எல்லா மண்டைக்குள்ளும் புதைந்து கிடக்கிறது. சென்னையிலேயே புதிய தலைமைச் செயலகத்துக்காகக் கட்டப்பட்டு மருத்துவமனையாக மாறியிருக்கும் பகுதியிலேயே உள்ள வீடுகளில் கழிப்பறையை தரையோடு தரையாக வடிவமைத்திருக்கிறார்கள். இதிலே மலம் கழிப்பதை எடுப்பதற்கு மனிதர் தான் வரவேண்டும். இப்படி ஒரு கழிப்பறையை வடிவமைத்திருக் கிறோமே என்ற புத்திகூட இல்லாத அளவுக்கு ஜாதி வெறி வடிவமைத்தவன் மண்டையில் ஏறிக் கிடக்கிறது.

'கக்கூஸ்' ஆவணப் படத்தை திரையிடுவதற்கு தொடர்ந்து காவல்துறை யினர் தடை போட்டார்கள். ஆவணப் படத்துக்கு சென்சார் சான்றிதழ் பெற வில்லை என்று காவல்துறை அதற்கு காரணம் கூறியது. மனித மலத்தை மனிதன் எடுக்கக் கூடாது என்று 1993லேயே சட்டம் போட்டார்கள். பிறகு 2003லும் சட்டம் போட் டார்கள். சட்டத்தை மத்திய அரசும் மதிப்பதில்லை. மாநில அரசும் மதிப்பதில்லை. சட்டத்தை மதிக்காத இந்த ஆட்சிகளுக்கு சட்ட மீறலை படம்பிடித்துக் காட்டும் எங்களிடம் 'சென்சார் சர்டிபிகேட்' வாங்கி விட்டாயா? என்று கேட்பதற்கு யோக்கியதை இல்லை. (கைதட்டல்) திவ்யா 'தேச விரோதி' என்கிறார்கள். எங்களை 'தேச விரோதி'களாக பட்டம் சூட்டுவதற்காக மகிழ்ச்சி அடைகிறோம். இந்த நாட்டில் உண்மையான மக்கள் தொண்டு செய்ய வேண்டும் என்றால் 'தேச விரோதி களாகத் தான்' இருக்க வேண்டும்.

தேச பக்தர்களின் யோக்கியதை என்ன? நாடு முழுதும் கழிப்பறைகளை கட்டுவதற்கு ரூ.2 இலட்சம் கோடி முதல் கட்டமாக நிதி ஒதுக்கினார்கள். நமக்கும் மகிழ்ச்சிதான். ஆனால் நான் கேட்பதெல்லாம் கழிப்பறைக் கட்ட நிதி ஒதுக்கினார்களே! 'செஃப்டிக் டேங்கை' யார் கட்டித் தருவார்கள்? மோகன் பகவத் கட்டித் தருவாரா? அமீத் ஷா கட்டித் தருவாரா? மோடி கட்டித் தருவாரா? 'செப்டிக் டேங்க்' இல்லாமல் இவர்கள் கட்டுகிற கழிப்பறைக்கு சுத்தம் செய்வதற்கு தலித் மக்கள் தான் வர வேண்டுமா? இவர்கள் பேசும் தூய்மை இந்தியா திட்டம், தலித் மக்களுக்கு எதிரான திட்டம்.

2013இல் கொண்டு வரப்பட்ட கையால் மலம் எடுப்பதைத் தடுக்கும் சட்டம் அதன் முகப்பிலேயே அவர்களுக்கு மறுவாழ்வு தர வேண்டும் என்று கூறுகிறது. மறுவாழ்வு எத்தனை பேருக்கு தந்தார்கள்? 2015ஆம் ஆண்டு கையால் மலம் எடுக்கும் தொழி லாளர்கள் பற்றிய கணக்கெடுப்பு நடத்தினார்கள். தமிழ்நாட்டில் அப்படி கையால் மலம் எடுப்பவர்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் தெரியுமா? வெறும் 462 பேர். இந்த கணக்கெடுப்பிற்கு ஒதுக்கப்பட்ட நிதி ரூ23 கோடி. இது அப்பட்டமான பொய். பல்லாயிரக் கணக்கில் கையில் மலம் எடுப்பவர்கள் இருக்கிறார்கள். இந்தக் கணக்கெடுப்பு சரியானது அல்ல; மறுகணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று 'பாடம்' நாராயணன் தொடர்ந்த வழக்கில், உயர்நீதிமன்றம் மறு கணக்கெடுப் புக்கு உத்தரவிட்டது. மறு கணக் கெடுப்பு நடத்தியபோது இந்த எண்ணிக்கை 332 ஆக குறைந்தது. இந்தக் கணக்கெடுப்புக்கு செலவிட்ட தொகை ரூ.17 கோடி. இந்தக் கணக் கெடுப்புகளுக்கு மட்டும் ஒதுக்கப் பட்ட 40 கோடி தொகையை மலம் எடுக்கும் தலித் மக்களின் மறு வாழ்வுக்கு பயன்படுத்தியிருந்தால் எவ்வளவோ பயன் கிடைத்திருக்கும். சி.அய்.டி.யு. தொழிற் சங்கத்திலேயே கையால் மலம் எடுப்போர் 8000 பேர் இருக்கிறார்கள். 100 வார்டுகளைக் கொண்ட எங்கள் மதுரையில் 8 வார்டு களில் மட்டும் 400பேர் இருக் கிறார்கள். இந்திய அரசு வெளியிட்டுள்ள எண்ணிக்கை 12841. இதில் 10,000 பேர் பா.ஜ.க. சாமியார் ஆதித்ய நாத் ஆட்சி நடத்தும் உ.பியில் இருக்கிறார்கள். இந்த கணக்கே பொய். அதிலும் உ.பி. மாநிலத்தின் யோக்கியதை எப்படி இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஒப்பீட்டளவில் தமிழ்நாடு எவ்வளவோ வளர்ந்த நிலையில் இருக்கிறது. மலக்குழியை சுத்தப் படுத்துவதற்காக மனிதர்கள் இறக்கி விடப்படுகிறார்கள். இதில் நச்சு வாயுவினால் இறந்து போகிறார்கள். இப்படி தலித் மக்கள் படுகொலை செய்யப்படுகிறார்கள். ஆனால் காவல்துறை 'சந்தேக மரணம்' என்று வழக்குகளைப் பதிவு செய்கிறது. கொலையை சந்தேக மரணம் என்று வெட்கமின்றி பதிவு செய்கிறது. காவல்துறையும் ஜாதி வெறியுடனே செயல்படுகிறது. சந்தேக மரணமாக பதிவு செய்யாதே என்று வழக்கை மாற்றுவதற்காக கடும் போராட்டம் நடத்த வேண்டியிருக் கிறது.

இந்த நிலையில் ஜப்பானிலிருந்து ஒரு இலட்சத்து எட்டாயிரம் கோடி ரூபாய் கடன் வாங்கி, டெல்லிக்கும் அகமதாபாத்துக்கும் மோடி புல்லட் இரயில் விடுகிறாராம். ஒரு டிக்கெட்டின் விலை ரூ. 7000. வடநாட்டு இரயில் நிலையங்களில் தலித் மக்கள் கையாலே மலம் அள்ளுகிறார்கள். இதை ஒழிக்க முன் வராதவர்கள், புல்லட் இரயில் விடுகிறார்கள். டெல்லியிலிருந்து மோடியை இதே இரயிலில் மீண்டும் அகமதாபாத்துக்கு அனுப்ப வேண்டும். (கைதட்டல்)

'ஈ.பி.எஸ் - ஓ.பி.எஸ்' அணிகளை அடிமைப்படுத்தி, கிருஷ்ணசாமி போன்றவர்களைப் பயன்படுத்தி, தமிழகத்தில் பா.ஜ.க. காலூன்ற துடிக்கிறது. புதிய தமிழகம் கட்சியைப் புதிய பார்ப்பனியமாக மாற்றி வருகிறார், கிருஷ்ணசாமி. பெண்களை இழிவுபடுத்தி இவர் பேசும் கருத்து களுக்கு பாலபாரதி சரியான பதிலடி தந்திருக்கிறார்.

இந்தச் சூழலில் கருப்பு, நீலம், சிவப்பு ஒன்றாக இணைய வேண்டிய அவசியமிருக்கிறது. அதற்கான மேடையை திராவிடர் விடுதலைக் கழகம் உருவாக்கியிருப்பதற்கு நன்றி தெரிவிக்கிறேன்" என்றார் திவ்யபாரதி.

## மயிலைப் பகுதி தோழர்கள் சிறப்புடன் நடத்திய பெரியார் விழா







சென்னை மாவட்ட மயிலைப் பகுதி கழகத் தோழர்கள் நடத்திய பெரியார் பிறந்த நாள் விழா, சுயமரியாதைக் கால்பந்து கழகத்தின் 5ஆம் ஆண்டு கால் பந்து போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசளிப்பு விழா, செப்.26 அன்று மாலை செயின் மேரிஸ் பாலம் அருகே சிறப்புடன் நடந்தது. விழாவின் மேடை 'பெரியார் இல்லம்' என்று பெயர் சூட்டப்பட்டு, மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டிருந்தது. அனிதா, கவுரி லங்கேஷ் படங்கள் மேடையில் வைக்கப்பட்டிருந்தன. விரட்டுக் கலைக் குழுவினரின் பறை இசை, நாடகங்கள், பாடல்களுடன் நிகழ்ச்சிகள் தொடங்கின. நிகழ்ச்சிக்கு பிரவீன் தலைமை தாங்கினார். தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகரன் உரையைத் தொடர்ந்து முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி அரிபரந்தாமன், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரையாற்றினர். போட்டி களில் வெற்றிபெற்ற அணிகளுக்கு நீதிபதி அரிபரந்தாமன், விடுதலை இராசேந்திரன், வழக்கறிஞர் திருமூர்த்தி பரிசுகளையும் விருதினையும் வழங்கினர். மாவட்ட செயலாளர் இரா. உமாபதி நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார். கடந்த ஒரு மாத காலமாக மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சுகுமார் தலைமையில் நிகழ்ச்சிக்காக கடைகடையாக நிதி வசூல் செய்து கடுமையாக உழைத்தவர்கள் - பிரவின், மாணிக்கம், விஜயகாந்த், கி.வா.அருண், சரண், சஞ்சய், சண்முகம், உதயா, பரணி, ஜா. உமாபதி ஆகிய தோழர்கள். அழகிய மேடையை குமரன் வடிவமைத் திருந்தார். கால்பந்து போட்டிகளை பார்த்திபனும், பொதுக் கூட்டத்தை மயிலைப் பகுதி கழகத் தலைவர் இராவணன், செயலாளர் மாரிமுத்து, பொருளாளர் சிவக்குமார், மனோகர் ஆகியோர் ஒருங்கிணைத்து செயல் படுத்தினர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 12th October 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN